# ஜன., 1 முதல் பிளாஸ்டிக் தடை உறுதி

## சென்னை கலெக்டர் திட்டவட்டம்

– நமது நிருபர் –

''ஜன., 1ம் தேதி முதல், பிளாஸ்டிக் பொருட்கள் கட்டாயம் தடை செய்யப்படும். இதனால், பிளாஸ்டிக் பொருட்கள் உற்பத்தி செய்வதை, உற்பத்தியாளர்கள் குறைத்துக் கொள்ள வேண்டும்,'' என, சென்னை கலெக்டர் சண்முகசுந்தரம் கூறினார்.

புத்தாண்டு முதல், ஒரு முறை மட்டுமே பயன்படுத்தக்கூடிய, 14 வகை பிளாஸ்டிக் பொருட்களுக்கு, தமிழக 'அரசு தடை விதித்துள்ளது.

இந்நிலையில், பிளாஸ்டிக் தடையை செயல்படுத்துவது குறித்து, கலந்தாய்வு கூட்டம், நேற்று முன்தினம், சென்னை கலெக்டர் அலுவலகத்தில் நடந்தது.

கூட்டத்தில், கலெக்டர் அ.சண்முகசுந்தரம், மாசு கட்டுப்பாட்டு வாரியம், மாநகராட்சி, மீன்வளத்துறை, பிளாஸ்டிக் உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் உட்பட பலர் பங்கேற்றனர்.

கூட்டத்தில், பிளாஸ்டிக் உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்களிடம் அதிகாரிகள் கூறியதாவது:

சென்னையில், ஜன., 1 முதல், ஒரு முறை உபயோகப்படுத்தக்கூடிய, 14 வகையான பிளாஸ்டிக் பொருட்களை விற்பனை செய்வதற்கும், உபயோகப்படுத்தவும் தடை செய்யப்பட்டு உள்ளது.



இதனால், பிளாஸ்டிக்கிற்கு மாற்றாக பாக்கு மட்டை, மண்பானை, அலுமினிய பொருட்கள், வாழை இலை, பேப்பர் ரோல், தாமரை இலை, பீங்கான் பொருள் ஆகியவற்றை உபயோகப்படுத்தலாம்.

உற்பத்தியாளர்கள், இந்த பொருளை உற்பத்தி செய்து விற்பனை செய்யலாம்.

இவ்வாறு அதிகாரிகள் கூறினர்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்த, பிளாஸ்டிக் உற்பத்தியாளர்கள் மற்றும் வியாபாரிகள் பேசியதாவது:

அதிக முதலீடு செய்து, பிளாஸ்டிக் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளோம். ஆறு மாத அவகாசத்தில், பிளாஸ்டிக் தடை செய்வதை ஏற்க இயலாது.

இன்னும் ஒரு ஆண்டிற்கு, பிளாஸ்டிக் தடைக்கான விதியை தளர்த்த வேண்டும். மாநகராட்சி, திடக்கழிவு மேலாண்மையை, சரிவர செய்தாலே, பிளாஸ்டிக்கால் பாதிப்பு வராது.

இவ்வாறு அவர்கள் பேசினர்.

இதையடுத்து பேசிய கலெக்டர் சண்முகசுந்தரம், ''ஜன., 1 முதல், பிளாஸ்டிக் பொருட்களுக்கான தடை கட்டாயம் அமல்படுத்தப்படும். பிளாஸ்டிக் உற்பத்தியை குறைத்து கொள்ளுங்கள்,'' என, வியாபாரிகளிடம் கூறினார்.

### நீதிமன்றத்தை நாட திட்டம்!

சென்னை பிளாஸ்டிக் உற்பத்தியாளர் மற்றும் விற்பனையாளர் சங்க தலைவர், ஜி.சங்கரன் கூறியதாவது:

தற்போதைய பிளாஸ்டிக் தடை என்பது, சிறு, குறு தொழில் முனைவோர்களை அழிக்கும் முயற்சியாக, நாங்கள் பார்க்கிறோம். இதனால், தமிழகத்தில் உள்ள, 25 ஆயிரம் சிறு, குறு தொழில் நிறுவனங்களும், இதில் பணிபுரியும் ஐந்து லட்சம் பேரும், வேலைவாய்ப்பை இழக்க நேரிடும்.

எனவே, பிளாஸ்டிக் பொருட்கள் தொடர்பாக, மத்திய அரசு எடுக்க உள்ள இறுதி முடிவு வரை, பிளாஸ்டிக் தடை என்ற அறிவிப்பை, தமிழக அரசு தள்ளி வைக்க வேண்டும் என, பல முறை கோரிக்கை வைத்துள்ளோம்.

இது தொடர்பாக, மாசு கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள், எங்களிடம் மூன்று முறை கருத்து கேட்டுள்ளனர். வரும், 30ம் தேதிக்குள், பிளாஸ்டிக் தடை ஆணையில், திருத்தம் மேற்கொள்ள கோரிக்கை வைத்துள்ளோம்.

கோரிக்கை மீது நடவடிக்கை எடுக்கவில்லையெனில், பிளாஸ்டிக் பொருள் தடை ஆணை மீது, தடை விதிக்க கோரி நீதிமன்றத்தை நாட உள்ளோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

DINAMALAR 29/11/2018